**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண். 112/2017**

PW1 – திரு.ஜேசுராஜ் நாள். 23.01.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரைய ஆவணங்களில் சொத்து விவரத்தில் தெற்கு பக்கம் அந்தோணியம்மாள், மரியம்மாள் ஆகியோர்களது சொத்து உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிராதில் தாவா சொத்திற்கு தெற்கே என்னுடைய சொத்து உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனது தகப்பனாருடைய சொத்து உள்ளது. தாவா சொத்திற்கு தெற்கே உள்ள சொத்திற்கு யார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் எனது பெயரில் ஏற்பட்டுள்ளது. எனது தகப்பனாருடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் இன்னாசி, சந்தியாகு என 2 நபர்கள் ஆவார்கள்.

2. தாவா சொத்திற்குரிய வருவாய் ஆவணங்களை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்திற்கு எனது பெயரிலோ, எனது தகப்பனார் பெயரிலோ வருவாய் ஆவணங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான், 1ம் பிரதிவாதி அவரது பெயருக்கு மோசடியாக மாற்றிக் கொண்டார். 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவை ரத்து செய்ய நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் 2017 ம் ஆண்டு மேற்படி விவரம் தெரியவந்தவுடன் மேற்படி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதற்கான அடங்கல்,

வரிரசீதுகள் போன்றவற்றை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. அந்தோணியம்மாள் வீட்டிற்கும் கிழக்கே உள்ள சொத்தை பிரதிவாதிகளின் தகப்பனார் இ.மிக்கேல் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி இ.மிக்கேல் என்பவரின் உடன்பிறந்த சகோதரரின் பெயர் குழந்தைசாமி என்றால் சரிதான். மேற்படி குழந்தைசாமிக்கும் பிரதிவாதிகளின் சகோதரி அந்தோணியம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் தேசிய நெடுஞ்சாலைக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு சாலை அமைக்கப்பட்டு வந்தது என்றால் அதை பற்றி தெரியாது. இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

4. தாவா சொத்தின் சர்வே எண். 371/47 உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்கள்.371/47A, 371/47B என உட்பிரிவுகள் செய்யப்பட்டு இருந்து வருகிறது என்றால் சரிதான். சர்வே எண். 371/47A 1ம் பிரதிவாதி பெயரிலும், சர்வே எண். 371/47B தேசிய நெடுஞ்சாலை என வருவாய் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 371/47B வருவாய் ஆவணங்களின்படி நெடுஞ்சாலை என தெரியவந்ததற்கு பிறகு சம்மந்தப்பட்ட துறையில் ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை. மேற்படி நிலம் ஆர்ஜிதப்படுத்தப்பட்டு அதற்கான தொகையை 1ம் பிரதிவாதி தான் பெற்றுள்ளார் என்றால் அதை பற்றி தெரியாது. தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் சி.இன்னாசி இடம் உள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றும், மேற்படி இன்னாசியின் தகப்பனார் பெயர் என்னவென்றால் சின்னப்பஉடையார் ஆகும். மேற்படி இன்னாசி எனது தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான்.

5. தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள இடமானது இன்னாசிக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, இன்னாசிக்கும், எனது தகப்பனாருக்கும் சேர்ந்து கிரையப் பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி இன்னாசிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு கிழக்கே எனது தகப்பனாரும், இன்னாசியும் சேர்ந்து வாங்கிய சொத்து உள்ளது என்றால் சரியல்ல, தேசிய நெடுஞ்சாலை உள்ளது. தாவா சொத்தில் மேல்புறம் உள்ள ஒன்றரை செண்ட் நிலமானது பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, அது அவருக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து, மேற்படி சொத்தை அவரது மகள் அந்தோணியம்மாளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார். மேற்படி ஒன்றரை செண்ட் நிலத்தில் தான் அந்தோணியம்மாள் வீடு கட்டி உள்ளாரா என்றால் சரியல்ல, மேற்படி சொத்துடன் சேர்த்து அவரது தாய்வழி சொத்து உடன் இணைந்து வீடு கட்டி உள்ளார். மேற்படி கிரைய சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் உள்ளது சவரிமுத்துக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, அந்தோணியம்மாளுக்கு தாயார் வழி சொத்தாகும்.

6. அந்தோணியம்மாளின் கணவர் குழந்தைசாமி இறந்து எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 5, 6 வருடங்கள் இருக்கும். அந்தோணியம்மாளின் கணவர் எனக்கோ, எனது தகப்பனாருக்கோ மற்றும் எனது சிறிய தகப்பனாருக்கோ எந்த ஆவணங்களும் எழுதி கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, கிரைய ஆவணங்கள் எழுதி கொடுத்துள்ளார். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரைய பத்திரங்களில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களில் எவ்வளவு நிலம் நெடுஞ்சாலைக்காக எடுக்கப்பட்டது என்றால் அதை பற்றி சரியாக தெரியாது.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை